RESEARCH ARTICLE

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2433

# Sequential Structure in Velerku short story collection

**B. Manonmani [a,*]**

[a] Department of Tamil, A.M.Jain College, Meenambakkam, Tamil Nadu, India.

*Corresponding author Email: manonmani.b@amjaincollege.edu.in

DOI: https://doi.org/10.54392/ijot2433

Received: 16-06-2024; Revised: 12-08-2024; Accepted: 19-08-2024; Published: 26-08-2024

**Abstract:** Kanmani Gunasekaran is one of India's finest writers. His short stories consist of long serials, short serials and mono-serials. Long serials have often been used for story flow. The various settings in the Vellarukku short stories are not inspired by the author. They are natural to the story. The intuition of the creator prompts to set up a rhetorical series, or rather a long series. In this context, Kanmani Gunasekaran's serial settings determine the structure and storyline of the short story. Thus, the author has used various similes in a humorous setting and in a realistic setting, while belittling others and highlighting the background of poverty. In this way, this article examines the serial structure of his' Vellarukku 'collection.

**Keywords:** Kanmani Gunasekaran, Short Stories, Vellerukku Story, Proverb

# ‘வெள்ளெருக்கு’ சிறுகதை தொகுப்பில் தொடர் அமைப்பு

**பா. மனோன்மணி [அ *]**

[அ] தமிழ்த்துறை, அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

சமகால எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க வட்டார வழக்கு எழுத்தாளர் கண்மணி குணசேகரன் அவர்கள். அவ்வகையில் அவரது ‘வெள்ளெருக்கு’ தொகுப்பில் மைந்துள்ள தொடர் அமைப்புக் குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. அவரது சிறுகதையில் நீண்ட தொடர்களும், சிறிய தொடர்களும், ஒரு சொல்லே தொடராக அமையும் அமைப்புகளும் காணப்படுகின்றன. நீண்ட தொடர்கள் பெரும்பாலும் கதை ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்றாகக் ‘கொடிப்பாதை’ என்னும் கதையில்,

“இருந்து இருந்து பார்த்து விட்டு பெத்த மனம்
பொறுக்காமல் கடையில் வாங்கி வந்த லட்டு
உருண்டையையும், வாழப்பழதையும் மடியில்
கட்டி கொண்டு முதல் நாள் இரவில் இருட்டோடு
இருட்டாய் தெருவைக் கடந்தாள்”

என்று வரும் தொடரைக் கூறலாம் (Kanmani Gunasekaran, 2004). கண்மணி குணசேகரனின் சிறுகதைகள் பெரும்பாலும், படைப்பாளியே தானே கதையைச் சொல்வதாக அமைந்துள்ளன. பாத்திரங்களின் மன உணர்வுகளைக் கூறும் போது வருணனையுடன் நீண்ட தொடர்களாக அமைந்துள்ளன. இதற்குச் ‘சமாதானக்கறி’ என்னும் கதையில் வரும் பின்வரும் தொடரைச் சான்றாகக் கொள்ளலாம்.

“வாய் காய்ந்து போய் குந்தியிருந்த நேரத்தில்

தண்ணிக்கும் கறிக்கும் ஒரு வழியை மீண்டும்

ஏற்படுத்த வேண்டும் என்று நோட்டு பொத்தை,

ரத்தம் ஈரல் என கிளறி விட்டவர்களே

அவர்கள் தான்"

சிறிய தொடர்கள் கூடக் கதையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன (Kanmani Gunasekaran, 2004). 'ஆணிகளின் கதை' என்றும் சிறுகதையில் வரும்

"வாசலில் கிடத்தியிருந்தார்கள்"

என்ற தொடர் உடலை விட்டு உயிர் பிரிந்த நிலையில் சுந்தராம்பாள் உடல் பிணமாகக் கிடக்கின்ற நிலையை உணர்த்துகின்றது (Kanmani Gunasekaran, 2004). இது போன்றே ஏனைய சிறுகதைகளிலும் சிறிய தொடர்கள் பல இடங்களில் கதைப் போக்கை உணர்த்தும் வகையில் அமைந்தள்ளன. மேலும், ஒரே சொல் தொடராக அமையும் உத்தியையும் ஆசிரியர் கையாண்டுள்ளார். இதற்கு 'கிக்குலிஞ்சான்' கதையில் வரும் `கெஞ்சினார்' "பார்த்துக்கலாம்" என்பனவும், 'மழிப்பு' என்னும் சிறுகதையில் வரும் 'ஒண்ணுமில்ல' 'காறித்துப்பினான்' என்பனவும், 'வலை' என்னும் சிறுகதையில் வரும் 'நிமிர்ந்தாள்', 'எதுக்குப்பா' என்பனவும் சான்றாக அமைகின்றன (Kanmani Gunasekaran, 2004).

வெள்ளெருக்குச் சிறுகதைகளில் வரும் பல்வேறு தொடர் அமைப்புகள் படைப்பாளியால் திட்மிட்டுப் புகுத்தப்பட்டவை அல்ல. அவை கதை செல்லும் பாங்கில் இயல்பாக அமைபவை. படைப்பாளியின் உள்ளுணர்வு ஒரு சொல்லமைந்த தொடரிலோ, அல்லது நீண்ட தொடரிலோ அமைக்கத் தூண்டுகிறது. இந்நிலையில் கண்மணி குணசேகரன் தொடர் அமைப்புகள், சிறுகதையின் நடையமைப்பு, கதையோட்டம் ஆகியவற்றைத் தீர்மானிப்பவையாக அமைகின்றன.

## வினாத் தொடர்

ஐயத்தைக் களைதற் பொருட்டு தொடுக்கப்படுவதே வினாவாகும். அத்தகைய வினாவை இலக்கண நூலார் அறுவகைப் படுத்துவர். அவை, அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பனவாகும். இவ்வறுவகை வினாக்கள் இலக்கண மரபுபடி கண்மணி குணசேகரனின் சிறுகதையில் இடம்பெறாவிட்டாலும் கதை கூறும் போக்கில் பல இடங்களிலும் வினாத் தொடர்கள் பயின்று வந்துள்ளன. அங்ஙனம் பயின்று வந்துள்ள வினாத் தொடர்கள் சமூக வாழ்வியலை எங்ஙனம் படம்பிடிக்கின்றன, என்பதை இத்தொடர் மூலம் ஆசிரியர் விளக்கிச் சென்றுள்ளார். சான்றாக, 'சமாதானக் கறி' சிறுகதையில்,

"ஆம்படையான் பேரைச் சொல்லலாமா?"

என்ற தொடர் கதாபாத்திரங்கள் இன்றும் பழமையிலேயே வாழ்ந்து வருபவர்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது (Kanmani Gunasekaran, 2004). மேலும் வறுமை நிலையை எடுத்துரைக்கும் நிலையிலும் ஆசிரியர் வினாத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். இதனை, 'சீவனம்' என்னம் சிறுகதையில் காணலாம்.

"நா என்னா கரி பொதையா போட்டு

வைச்சிருக்கன் இல்ல அச்சி கட தெரட்டவும்,

கட்டுப் போடவுமா வேல நடக்குது?"

கதாபாத்திரங்களுக்கு ஏற்படும் ஐயங்களைப் பிறரிடம் கேட்டு தீர்த்துக் கொள்வதாய் அமையும் நிலையிலும் ஆசிரியர் வினாத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார் (Kanmani Gunasekaran, 2004). 'வெள்ளெருக்கு' சிறுகதையில் வரும்,

"வெள்ள எருக்குத் தேடிக்கிட்டுப் போறம் இங்க

எங்கியாவுது இருக்குமா?"

என்ற தொடரைச் சான்றாகக் கொள்ளலாம் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் நிலையில், ஒரு கதாபாத்திரம் இன்னொரு கதாபாத்திரத்திடம் வினாத் தொடுத்துத் தெளிவு பெறும் வகையில் வினாத் தொடர்கள் இடம் பெற்றுள்ளன (Kanmani Gunasekaran, 2004). ‘வண்ணம்’ என்னும் சிறுகதையில்,

“ஓம் பேரு என்னா என்னா ஊரு?”

என்ற தொடர் இடம்பெற்றுள்ளது (Kanmani Gunasekaran, 2004). ஒரே சொல்லில் விடை கூறும் வகையில் தொடர்ந்து இரண்டு மூன்று வினாக்களைப் பயன்படுத்தும் போக்கும் கண்மணி குணசேகரனின் சிறுகதைகளில் காணப்படுகின்றது. இதற்கு,

“ஓங்க வாத்தி பேரென்ன”

“தில்லை வனங்க”

“என்னா ஊரு”

“செதம்பரங்க”

என்று வரும் ‘வெள்ளெருக்கு’ சிறுகதையின் சொல்லாட்சியைக் குறிப்பிடலாம் (Kanmani Gunasekaran, 2004).

இவ்வாறு, பாத்திரங்களின் மனோநிலையை விளக்கும் நிலையிலும், பாத்திரங்களின் வாழ்க்கைச் சூழலை வெளிப்படுத்தும் இடத்தும், பாத்திரங்களின் அறிமுகத்தின் போதும் படிப்போர்க்குச் சலிப்பு ஏற்படாதவாறு ஆசிரியர் வினாத் தொடர்களை அமைத்துள்ளார்.

## வருணனை

சிறுகதைகளில் பாத்திரங்களின் சூழலையும் பண்புகளையும் இடைஇடையே எடுத்துரைக்க வருணனை துணை நிற்கின்றது. இந்நிலையில் மா. இராமலிங்கம்,

“ஒரு பொருள் குறித்த தருணத்தில் எவ்வாறு காட்சி

தருகிறது என்று காட்டும் வகையில் எழுதப்பட்டது

வருணனை”

என்கிறார் (Ramalingam, 1992).

கதையின் போக்கினை மாற்றாது நன்கு அமைத்துச்செல்ல வருணனைகள் உதவுகின்றன. கதைக்கான காலம், பாத்திரங்களுக்கான காரணங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் நிலையில் ஆசிரியர் வருணனைகளைக் கையாண்டுள்ளார். வருணனை ஆசிரியரின் இடையீடு போன்று தோன்றினாலும் கதை ஓட்டத்திற்கு அவை பெரிதும் துணைநிற்பனவாகும். இரு காட்சிகளை இணைக்க வருணனை பயன்படுகின்றது. ஆசிரியர் தனது சிறுகதைகள் ஒவ்வொன்றிலும் கதைக்கான சூழல் வருணனையை முதன்மையாகக் கொண்டு படைத்துள்ளார். இப்போக்கினைக் `கொடிப்பாதை’ முதலாக ‘வண்ணம்’ ஈறாக உள்ள சிறுகதைகளில் காணமுடிகிறது. ‘கொடிப்பாதை’ என்றும் சிறுகதையைப் பேருந்தினை மையப்படுத்தி ஆசிரியர் நகர்த்திச் சென்றுள்ளார். எனவே, கதையின் தொடக்கத்தில்,

“என்றுமில்லாத வேகத்தில் ரோட்டின் பொக்குழிகளைப்

பொருட்படுத்தாமல் சீறிக்கொண்டு வந்தது”.

எனப் பேருந்திற்கான தன்மையை வருணனையாக ஆசிரியர் கூறியுள்ளார் (Kanmani Gunasekaran, 2004).

கதைக் களத்தை எடுத்துரைக்கும் நிலையிலும் ஆசிரியர் எதார்த்தமான வருணனைகளைப் பயன்படுத்திச் சென்றுள்ளார். குறக்குடியினர் தமக்கென ஓர் இடத்தை உரியதாக்கி வாழ்வோர்

அல்லர், எனினும், அவர்கள் வாழும் சூழல் எத்தகையது என்பதை ஆசிரியர் 'சமாதானக்கறி' சிறுகதையில் பின்வருமாறு வருணித்துள்ளார்.

"தெருவென்பதெல்லாம் ஒன்று கிடையாது

அள்ளித் தெளித்த மாதிரி வீடுகள் சந்தாலயும்

பொந்தாலயுந்தான் வழி எல்லாம் கருப்பஞ்சருவு

அடித்த குடிசைகள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு

எந்தக் குடிசைக்குள்ளும் போக முடியாது நெற்றியைப்

பதம் பார்த்து விடும் கதவு என்பதெல்லாம் ஒன்றுமில்லை"

வறுமையில் வாடும் கதாபாத்திரத்தின் தோற்றத்தை எடுத்துரைக்கும் நிலையில் மிக நீண்ட வருணனைகள் இடம்பெற்றுளளன (Kanmani Gunasekaran, 2004). 'சீவனம்' என்னும் சிறுகதையில் முதன்மைப் பாத்திரமான கொல்ல ஆசாரியின் தோற்றத்தை ஆசிரியர் பின்வருமாறு வருணனை செய்துள்ளார். இதனை,

"கக்கத்தில் சணல் சாக்கு மார்பு வரை

சாம்பல் புழுதி. நிரந்தரமாய் படிந்த நிறமாறிப்

போன தாடியில் இருட்டில் சுள்ளான்கள்

வந்த சிக்கி, நெஞ்சீல் அருவியது பரட்டை

தலைமயிருக்கும் படர்ந்த தாடிக்கும் சுருக்கத்தில்

விரிந்த மீசைக்கும்"

என்ற தொடர் விளக்குகிறது (Kanmani Gunasekaran, 2004)..

அச்சம் தரும் வகையிலான வருணனைகளையும் ஆசிரியர் அமைத்துச் சென்றுயுள்ளார். சான்றாக,

"செத்தவனுக்கு பெரிய கொடுவாள மீசை,

முட்டை முழி தெருவில் அவன் வரும்போதே

வாண்டுகள் அலறியடித்துக் கொண்டு ஓடும்"

என்ற தொடரைக் குறிப்பிடலாம். சில எதார்த்தமான நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் வருணனைகளாக அமைத்துள்ளார் (Kanmani Gunasekaran, 2004)..

"தாடியிலும், மீசையிலும் சளியும், கண்ணீருமாய்

தரையை நனைக்கிறது."

இவ்வாறாகக் கதை நிகழும் சூழலை எடுத்துரைக்கும் நிலையிலும், கதாபாத்திரங்களின் தோற்றப் பொலிவையும், அச்சத்தை உருவாக்கும் சூழலிலும், எதார்த்த நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் இடங்களிலும் ஆசிரியரின் நடையில் இயல்பான வருணனைகள் இடம்பெற்றுள்ளன (Kanmani Gunasekaran, 2004)..

## உவமை

அறியாத ஒன்றை அறிய வைப்பதற்காக அறிந்த பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும், இவ்வகையில் பல்வேறு உவமைகள் கண்மணி குணசேகரனின் சிறுகதைகளில் காணப்படுகின்றன. உவமைகள் கதை அமைப்புக்கு நெருங்கிய தொடர்பு உடையவையாகவும், கதைச் செய்திகளை விளக்கு பவையாகவும், இனிய தன்மை உடையவையாகவும் காணப்படுகின்றன.

உறவு நிலையில் திருமணத்தின் போது தாய்மாமனின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ‘சமாதானக்கறி’ யில் தாய்மாமனான சின்னக்காத்தான் தன் உரிமைக்குக் குறை ஏற்படும் நிலையில் பெரியோரை இகழுகின்றான். இச்சூழலில், பெண் வீட்டில் சமைத்துப் போடும் பன்றி கறிச் சமையலுக்கு எல்லோரும் விருப்பமுறுகின்றனர். இந்நிலையில்,

“இவருகூட ஒரு தூக்குக்கு எடுத்துக்கிட்டுப்

போனாராம் சந்தடி சாக்கல, நாயி நொழைஞ்சி

இழுத்துக்கிட்டு ஓடற மாதிரி ஒரு சப்பயக்கிப்பய

இழுத்துக்கிட்டு போயிருப்ப.”

என்று சின்னக்காத்தான் கூறுவதாக அமைத்துள்ள தொடரில் உவமை இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் உவமையைக் கையாளுமிடத்து நகைச்சுவை உவமைகளையும் பயன்படுத்திச் சென்றுள்ளார் (Kanmani Gunasekaran, 2004).

“தொந்தி பெருத்தவனின் தக்கா புக்கா நடையைப்

போன்று அதக்கிக் கொண்டு வந்து எசாகையில்

நின்று நோட்டம் பார்த்தது ஒன்று”

இத்தொடர் ‘புள்ளிப்பொட்டை’ என்னும் சிறுகதையில் இடம் பெற்றுள்ளது. புள்ளிப் பொட்டையை நோக்கி வரும் ஏனைய சேவல்களின் நடையை ஆசிரியர் நகைச்சுவை உணர்வோடு உவமையாக இங்குக் கையாண்டுள்ளார். இதனை சூழ்ந்து நோக்கின் நன்கு புலனாகும். மேலும், வறுமையின் நிலையை எடுத்துரைக்கும் இடத்தும் உவமைகளை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

“படமெடுத்தாடும் நல்ல பாம்பின் விரிந்த

தலையாய் தோற்றம் காட்டும் ஒடுங்கிய

அவன் வயிற்றில்”

என்ற இத்தொடரில் பாத்திரங்களின் மனோ நிலையை எடுத்துரைக்கும் இடத்து ஆசிரியர் தன் கூற்றாக உவமையைக் கையாண்டுள்ளார் (Kanmani Gunasekaran, 2004).

## முடிவுரை

இவ்வாறு, ஆசிரியர் பிறரை இகழ்ந்துரைக்கும் நிலையிலும் வறுமையின் பின்புலத்தை எடுத்துரைக்கும் நிலையிலும், நகைச்சுவை அமைப்பிலும், எதார்த்த நிலையிலும் பல்வேறு உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

## References

Kanmani Gunasekaran, (2004) Vellerukku, Tamizhini Publication, Chennai, India

Ramalingam, M. (1992) Urainadai, Tamil Puthagalayam, Chennai, India

## Conflict of interest

The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

B. Manonmani, Sequential Structure in Velerku short story collection, Indian Journal of Tamil, 5(3), (2024) 12-17. https://doi.org/10.54392/ijot2433